தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
ஜனவரி 18, 2010 இதழுடன் இணைப்பு

சிஸ்டத்தைச் சரிப்படுத்த எம்.எஸ்.கான்பிக்

சமுதாய தளங்களின் இலக்கு மாறிய 2009

'டிவி'க்களில் ஸ்கைப்

ஹேக்கர்களின் புதிய இலக்குகள்

கம்ப்யூட்டர் பாதுகாப்பு குறித்து ஆய்வு நடத்தி வரும் மேக் அபி நிறுவனப் பிரிவு, இந்த ஆண்டில் அடோப் பிளாஷ் மற்றும் அடோப் அக்ரோபட் ரீடர் தொகுப்புகளை வைரஸ் மற்றும் பிற நாசவேலை புரோகிராம்கள் தங்கள் இலக்காகக் கொள்ளலாம் என எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த சைபர் கிரிமினல்கள் இதுவரை மைக்ரோசாப்ட் சிஸ்டம் மற்றும் அப்ளிகேஷன் புரோகிராம்களைத்தான் தங்கள் இலக்காக வைத்துச் செயல்பட்டு வந்தனர். அதில் உள்ள பிரச்னைக்குரிய இடங்களைக் கண்டறிந்து, அவற்றின் மூலம் வைரஸ் களையும், மால்வேர்களையும் அனுப்பி நாசவேலைகளை மேற்கொண்டு வந்தனர். ஏனென்றால் இவைதான் கம்ப்யூட்டரில் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால் இப்போது பிளாஷ் மற்றும் அடோப் அக்ரோபட் ரீடர் போன்றவை அதிகம் பயன்படுத்தப்படுவதால், இவர்களின் கவனம் இவற்றின் பக்கம் திரும்பியுள்ளது. மேலும் மைக்ரோசாப்ட் நிறுவனம் தன் தொகுப்பு களைச் சரியான பாதுகாப்பு வளையத்தில் அமைத்து வருகிறது.

அடோப் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி தங்கள் அப்ளிகேஷன் புரோகிராம்கள் மீது ஹேக்கர்களின் கவனம் திரும்பி இருப்பதனையும், பலர் புதிய மால்வேர் புரோகிராம்கள் மூலம் தங்கள் புரோகிராம்களுக்குள் புக முயற்சிப்பதனையும் ஒத்துக் கொண்டுள்ளார். அதற்கேற்ற வகையில் அவற்றை முறியடிக்க தங்கள் நிறுவனம் பேட்ச் பைல்களைத் தந்து வருவதாகவும் குறிப்பிட்டுள் ளார்.

இவற்றுடன் மொஸில்லா நிறுவனத்தின் பயர்பாக்ஸ் பிரவுசர் மற்றும் ஆப்பிள் நிறுவனத் தின் குயிக் டைம் புரோகிராமில் இத்தகைய தாக்குதல்கள், அண்மைக் காலங்களில் அதிகமாகி உள்ளதையும் மேக் அபி நிறுவனம் கண்டறிந்து தெரிவித்துள்ளது.

மேலும் இது பற்றிக் கூறுகையில், சோஷியல் நெட்வொர்க் தளங்களான பேஸ்புக் மற்றும் ட்விட்டர் தளங்களிலும் இந்த தாக்குதல் அதிக அளவில் இந்த ஆண்டு இருக்க வாய்ப்புகள் உண்டு எனவும் தெரிவித்துள்ளது.

ஆனால் பன்னாட்டளவில் இது குறித்த விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளதால், இந்த சைபர் குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை வழங்கும் வகையில் சட்டங்கள் திருத்தப்பட்டு அமலாக்கப்பட இருக்கின்றன. எனவே இந்த வகை குற்றங்கள் குறையவும் வாய்ப்புகள் உள்ளன.

உள்ளே

பயர்பாக்ஸ் மொபைல் பிரவுசர் — பக்கம் 5

டேப்களை மெமரியிலிருந்து விலக்க — பக்கம் 7

சமுதாய தளங்களின் இலக்கு மாறிய 2009 — பக்கம் 13

வாசகர்களே...

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் நூல்கள்

கம்ப்யூட்டர் தொடர்பான நூல், 'சி.டி.'க்களை கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

2009 ஆகஸ்ட் பிறகு உள்ள 'சிடி'க்களை மட்டும் அனுப்பவும். 'சி.டி.'யை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், விலை, வெளியிட்ட நாள், கிடைக்கும் இடம் ஆகியவற்றை குறிப்பிடவும்.

தினமலர் – கம்ப்யூட்டர் மலர், 8, காசா மேஜர் ரோடு, எழும்பூர், சென்னை 600 008.

computermalar@dinamalar.in

சிஸ்டத்தைச் சரிப்படுத்த

எம்.எஸ். கான்பிக்

கம்ப்யூட்டர் சிஸ்டத்தில் சிறிய பிரச்னைகள் ஏற்படுகையிலும், ஆப்பரேட்டிங் சிஸ்டம் செயல்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்கையிலும், நமக்குக் கிடைக்கும் அறிவுரை எம்.எஸ். கான்பிக் மூலம் சில மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே. அது மட்டுமின்றி, உங்கள் கம்ப்யூட்டர் பூட் ஆக அதிக நேரம் ஆகின்றதா? ஸ்டார்ட் அப் அப்ளிகேஷன்கள் இயங்கத் தொடங்குவதைக் காண நீங்கள் வெகுநேரம் மானிட்டர் திரையை உற்று நோக்கிக் கொண்டே இருக்க வேண்டியுள்ளதா? காத்திருத்தல் என்பது மனத்தளவில் ஒரு சித்திரவதை என்று ஆல்டஸ் ஹக்ஸ்லி என்ற அறிஞர் கூறியது அப்போது தான் எவ்வளவு உண்மை என்று புரிகிறதா? இதற்கெல்லாம் ஓர் அருமருந்தாக நமக்குக் கிடைத்திருப்பதுதான் எம்.எஸ். கான்பிக் (MSConfig) என்னும் செயல்பாடு. இந்த பயன்பாட்டில் அடங்கியுள்ள செயல்பாடுகளை இங்கு பார்க்கலாம்.

MSConfig என்பது Microsoft System Configuration Utility என்பதன் சுருக்கமாகும். இதுவே விண்டோஸ் விஸ்டாவில் System Configuration என்று அழைக்கப் படுகிறது. இது ஒரு டூல்; சிஸ்டத்தைச் சரிப்படுத்த விண்டோஸ் நமக்கு தரும் சாதனம். விண்டோஸ் 98, எக்ஸ்பி, விஸ்டா ஆகிய சிஸ்டங்களில் இது இணைந்தே கிடைக்கிறது. விண்டோஸ் 2000 சிஸ்டம் வைத்திருப்பவர்கள், இந்த டூலை டவுண்லோட் செய்து பயன்படுத்தலாம். இப்போது இந்த சிஸ்டத்தினை சிலர் இன்னும் பயன்படுத்தி வருவதால் இதனைக் குறிப்பிட்டுள்ளேன்.

எம்.எஸ். கான்பிக் விண்டோவினைத் திறக்க, ஸ்டார்ட் அழுத்தி ரன் பாக்ஸில் msconfig என டைப் செய்து என்டர் அழுத்த வேண்டும். உடனே ஐந்து டேப்கள் அடங்கிய விண்டோ ஒன்று கிடைக்கும்.



ஜெனரல் டேப்(General): இது முதலில் காணப்படும் டேப். இதில் மூன்று – Normal Startup, Diagnostic Startup மற்றும் Selective Startup – பிரிவுகள் உண்டு. நாம் எதிர்பார்த்தபடி சிஸ்டம் இயங்குகையில் நார்மல் ஸ்டார்ட் அப்பினைப் பயன்படுத்துகிறோம். டயக்னாஸ்டிக் ஸ்டார்ட் அப் பிரிவினை நாம் எதிர்பாராத வகையில் சிஸ்டம் இயங்குகையில், அதனை ஆய்வு செய்திடப் பயன்படுத்துகிறோம். நாம் தேர்ந்தெடுத்த சில புரோகிராம்களின் இயக்கத்துடன், சிஸ்டம் இயக்கத்தினைத் தொடங்கிட செலக்டிவ் ஸ்டார்ட் அப் பிரிவைப் பயன்படுத்துகிறோம்.

பூட் (Boot): இந்த டேப்பில் கிளிக் செய்து கிடைக்கும் விண்டோவில், நாம் கம்ப்யூட்டரில்

அப்போது இன்ஸ்டால் செய்து வைத்திருக்கும் ஆப்பரேட்டிங் சிஸ்டங்களைக் காட்டுகிறது. அத்துடன் அந்த சிஸ்டங்களை, நாம் விரும்பும் வகையில் இணைந்து செயல்பட வைத்திட வழி தருகிறது. Safe Boot, Boot Log, Time out Delay ஆகியவற்றை இங்கு மாற்றி அமைக்கலாம். கம்ப்யூட்டர் இயக்கம் குறித்து அவ்வளவாகத் தெரியாதவர்கள், இந்த பிரிவினைக் கவனமாகக் கையாள வேண்டும். எதனையும் தேவையின்றி மாற்றுவதனைத் தவிர்க்க வேண்டும்.

சர்வீசஸ் (Services): நம் கம்ப்யூட்டரில் இன்ஸ்டால் செய்யப்பட்டுள்ள அனைத்து வசதிகளும் இங்கு பட்டியலிடப்படும். மேலும் அப்போது அவை இயங்குகிறதா, நிறுத்தப்பட்டுள்ளதா (Running, Stopped) என்றும் காட்டப்படும். எந்த சர்வீஸ் பிரிவினையும் தேர்ந்தெடுத்து, அந்த இயக்கத்தினை தொடங்கவும்,முடக்கவும் (Enable or Disable) செய்திடலாம். "Hide all Microsoft services" என்பதன் முன் டிக் அடையாளம் அமைத்துவிட்டால், மற்றவர்கள் இவற்றில் தேவையில்லாமல் மாற்றங்கள் செய்வதனைத் தடுத்துவிடலாம். மேலும் தேவையற்ற சர்வீஸ் புரோகிராம்கள், கம்ப்யூட்டர் இயக்கத்தின் பின்னணியில் இயங்கி நம் மெமரியில் இடம் பிடிப்பதனை, இந்த பட்டியலில் அதன் இயக்கத்தினை முடக்கி வைத்து தவிர்க்கலாம்.

ஸ்டார்ட் அப் (Startup): இந்த டேப்பில் கிளிக் செய்தால் கிடைக்கும் விண்டோவில், கம்ப்யூட்டர் ஸ்டார்ட் ஆகும் போது, இயங்கத் தொடங்கும் பட்டியல் கிடைக்கும். சிஸ்டம் ட்ரேயில் இருக்கும் புரோகிராம்களும், சிஸ்டம் பின்னணியில் இயங்கும் புரோகிராம்களும் இந்த பட்டியலில் இருக்கும். பொதுவாகப் பலரின் கம்ப்யூட்டர்களில் போன்ற புரோகிராம்களை ஸ்டார்ட் அப் புரோகிராம்களாகப் பார்க்கலாம். இவற்றில் தேவை இல்லாததை நீக்கினால், கம்ப்யூட்டர் பூட் ஆவது விரைவில் நடக்கும்.

டூல்ஸ் (Tools): விண்டோஸ் இயக்கத்தினுள்ளாக பல்வேறு டூல்ஸ்களை (எ.கா. System Information, Programs, System Restore போன்றவை) இயக்கு வதற்கான தளம் இது.

சரி, அடுத்து எப்படி எம்.எஸ். கான்பிக் இயக்கி, சிஸ்டம் பூட் ஆகும் நேரத்தைக் குறைக்கலாம் என்று பார்க்கலாம். இதனை ஓரளவிற்கு சிஸ்டம் இயங்கும் தன்மையினை அறிந்தவர்கள் மட்டுமே செய்திட வேண்டும். (நமக்கா தெரியாது! என்று முடிவு செய்து பின் சிக்கலில் சிக்கி, கம்ப்யூட்டர் மலர் மீது பழி போட வேண்டாம்.)

முதலில் ஸ்டார்ட் அப் தொடங்கும்போதே தேவையான சர்வீசஸ் எவை எவை என தெரிந்து கொள்ளவும்.

அதே போல ஸ்டார்ட் அப் அப்ளிகேஷன்கள் என்ன என்ன வேண்டும் என்பதனையும் முடிவு செய்திடவும். இதனை ஓரளவு எண்ணிக்கை குறைவாகவே வைத்துக் கொள்ளவும். அடிப்படையில் மிகவும் முக்கியத் தேவைகளையும், கட்டாயம் பயன்பாட்டிற்குத் தேவையானவற்றை மட்டும் வைத்துக் கொள்ளவும்.

அடுத்து ரன் மெனு சென்று எம்.எஸ்.கான்பிக் டைப் செய்து பெறவும். சர்வீசஸ் டேப் கிளிக் செய்து தேவையற்ற சர்வீஸ் புரோகிராம்களை முடக்கி (Disable) வைக்கவும். "Hide all Microsoft Services" என்று இருப்பதில் டிக் அடையாளம் ஏற்படுத்தப் பட்டுள்ள தனை உறுதி செய்திடவும்.

அடுத்து ஸ்டார்ட் அப் டேப் கிளிக் செய்து தேவையற்ற அப்ளிகேஷன் புரோகிராம்களை நீக்கவும். அடுத்து ஓகே கிளிக் செய்திடவும். சிஸ்டத்தை ரீஸ்டார்ட் செய்திட வேண்டும் என்ற செய்தி கிடைத்தவுடன், அனைத்து அப்ளிகேஷன்களையும் மூடி, விண்டோஸ் இயக்கத்தினை ரீஸ்டார்ட் செய்திடவும்.

இப்போது ஸ்டார்ட் அப் நேரம் கணிசமாகக் குறைந்திடும். எந்த அளவிற்கு புரோகிராம்களை நீக்கி, குறைந்த எண்ணிக்கையில் புரோகிராம்களை, ஸ்டார்ட் அப் தொடங்கும்போது ஆரம்பிக்கும் வகையில் வைத்துள்ளீர்களோ, அந்த அளவிற்கு நேரம் குறையும்.

மீண்டும் ஏதேனும் புரோகிராம், ஸ்டார்ட் அப் செய்திடும்போதே தேவை என்றால், எம்.எஸ். கான்பிக் சென்று, ஸ்டார்ட் அப் போல்டரில் அந்த புரோகிராம்களின் மூன் டிக் அடையாளம் ஏற்படுத்தவும்.

பயர்பாக்ஸ் மொபைல் பிரவுசர்

மொஸில்லா நிறுவனம், மொபைல் போன்களுக்கான பயர்பாக்ஸ் பிரவுசர் தொகுப்பை வெளியிட உள்ளதாக செய்தி வந்ததிலிருந்து பலரும் அதனை எதிர்பார்த்திருந்தனர். முதலில் இது தாமதமாகும் என்ற செய்தி கிடைத்தது. ஆனால் இப்போது நோக்கியா என்900 மொபைல் போனுக்கான இறுதி சோதனைப் பதிப்பு வெளியிடப்பட்டுள்ளது. பென்னக் (Fennec) என்று அழைக்கப்படும் இந்த பிரவுசரை நோக்கியா என்810 போனிலும் பயன்படுத்தலாம். உங்களிடம் இந்த போன்களில் ஒன்று இருந்தால் http://www.unwiredview.com/2010/01/01/mozilla-firefox-rc1-for-maemo-nokia-n900-n810-available-for-download/ என்ற முகவரியில் உள்ள தளத்தில் இந்த பிரவுசர் அப்ளிகேஷனை டவுண்லோட் செய்து பயன்படுத்திப் பார்க்கலாம். இந்த பிரவுசரிலும் டேப்கள் வழி பிரவுசிங், மெனுபார், பாஸ்வேர்ட் மேனேஜர், போன் பயன்படுத்தப்படும் இடம் அறிந்த செயல்பாடு, ஒரே கீ வழி புக் மார்க் செய்தல், டெஸ்க்டாப் கம்ப்யூட்டருடன் இணைத்துச் செயல்படுத்துதல் ஆகிய வசதிகள் கிடைக்கின்றன. பன்னாட்டளவில் 30 மொழிகளை இது சப்போர்ட் செய்கிறது.

எழுத்து தொடர்பான ஷார்ட் கட் கீகள்

எழுத்தை மாற்ற CTRL+SHIFT+F
எழுத்தின் அளவை மாற்ற CTRL+SHIFT+P
எழுத்தின் அளவை அதிகப்படுத்த CTRL+SHIFT+>
எழுத்தின் அளவைக் குறைக்க CTRL+SHIFT+<
எழுத்தின் அளவை ஒரு புள்ளி கூட்ட CTRL+]
எழுத்தின் அளவை ஒரு புள்ளி குறைக்க CTRL+[
பெரிய சிறிய எழுத்தாக மாற்ற SHIFT+F3
அனைத்தும் பெரிய எழுத்துக்களாக மாற்ற CTRL+SHIFT+A
எழுத்தை போல்ட் செய்திடவும் மாற்றவும் CTRL+B
அடிக்கோடினை அமைக்க, நீக்க CTRL+U
சொற்களை மட்டும் (ஸ்பேஸ் இல்லாமல்) அடிக்கோடிட/நீக்க CTRL+SHIFT+W
சாய்வெழுத்து அமைக்க / நீக்க CTRL+I
எழுத்தை சிறிய கேபிடல் எழுத்தாக அமைக்க CTRL+SHIFT+K
தொகுப்பை மூட ALT+F4
அனைத்து விண்டோவினையும் சுருக்கி வைக்க W logo key+M
டெக்ஸ்ட் இரு கோடுகளில் அடிக்கோடிட CTRL+SHIFT+D
டெக்ஸ்ட்டை மறைக்க மீண்டும் கொண்டுவர CTRL+SHIFT+H
பைல் போல்டர் கண்டுபிடிக்க WINDOWS+F
ஆட்டோமேடிக் ஸ்பேஸிங் அமைக்க CTRL+=
தற்போதைய வேலையை நீக்க ESC
சிம்பல்(அடையாளக் குறி) எழுத்துக்கு மாற CTRL+SHIFT+Q
அச்சில் வராத குறிகளைக் காண CTRL+SHIFT+*

ஆப்பரா மினி பயன்பாடு

மொபைல் போனில் இணைய தளங்களைக் காண அதிகம் பயன்படும் பிரவுசர் தொகுப்பு ஆப்பரா மினி தொகுப்பாகும். சென்ற 2009 ஆம் ஆண்டில் இது எந்த அளவில் பயன்பட்டது என்பது குறித்த குறிப்புகள் தற்போது கிடைத்துள்ளன.

சென்ற 2008 நவம்பர் வரை இந்த தொகுப்பினை 1.64 கோடி பேர் பயன்படுத்தி வந்தனர். சென்ற 2009 நவம்பரில் இதனைப் பயன்படுத்தியவர்களின் எண்ணிக்கை 4.17 கோடியாக உயர்ந்திருந்தது. இந்த எண்ணிக்கை, அக்டோபர் மாதத்தில் பயன்படுத்தியவர்களைக் காட்டிலும் 5.3 சதவீதம் கூடுதலாகும். முந்தைய ஆண்டைக் காட்டிலும் 154 சதவீதம் அதிகமாகும். 4.17 கோடி பேர் 1880 கோடி பக்கங்களை ஆப்பரா மினி மூலம் பார்த்துள்ளனர்.

ஆப்பரா மினி பிரவுசரைப் பயன்படுத்திய மக்கள் உள்ள நாடுகள், எண்ணிக்கையின் அடிப்படையில் பட்டியலிட்டால், கீழ்க்குறித்தவாறு வருகிறது: ரஷ்யா, இந்தோனேஷியா, இந்தியா, சீனா, உக்ரைன், தென் ஆப்பிரிக்கா, அமெரிக்கா, பிரிட்டன், வியட்நாம் மற்றும் போலந்து.

ஆப்பிள் ஸ்டோரில் 300 கோடி டவுண்லோட்



பாடல்கள், கூடுதல் வசதி தரும் புரோகிராம்கள் எனத் தன் படைப்புகளை வாடிக்கையாளர் கள் எளிதாக டவுண்லோட் செய்திட ஆப்பிள் நிறுவனம் 2008 ஆம் ஆண்டு பிப்ரவரி 28ல் App Store என்ற தளத்தைத் தொடங் கியது. சென்ற வாரம் இந்த தளத்திலிருந்து செய்யப்பட்ட டவுண்லோட் புரோகிராம்களின் எண்ணிக்கை 300 கோடியைத் தாண்டி சாதனை படைத்தது. தொடங்கும் போது 500 அப்ளிகேஷன் கள் இதில் இருந்தன. தற்போது ஐபோன் மற்றும் ஐபாட் டச் போன்களுக்கான அப்ளிகேஷன் கள் ஒரு லட்சத்திற்கும் மேல் உள்ளன. இவற்றில் இலவச அப்ளிகேஷன் புரோகிராம் களும் உண்டு.

ஆப் ஸ்டோர் தள செயல்பாடு இன்டர்நெட் உலகில் புதுமையைப் படைத்தது. இதனைப் பின்பற்றி மற்ற மொபைல் நிறுவனங்களும் இதே போன்ற ஸ்டோரினைத் தொடங்கின என்பதே இதன் வெற்றிக்கு அடையாளம் ஆகும். எல்.ஜி., ரிசர்ச் இன் மோஷன், நோக்கியா, கூகுள், பால்ம் மற்றும் மைக்ரோசாப்ட் நிறுவனங்கள் தங்கள் ஸ்டோர் தளங்களைத் தொடங்கி நடத்தி வருகின்றன. இருப்பினும் ஆப் ஸ்டோர் போல எதுவும் பெரிய வெற்றியைப் பெறவில்லை.

"கலைக்களஞ்சியம்"

எல்.சி.டி. LCD - Liquid Crystal Display: குறைந்த மின் சக்தியில் குறைவான தடிமனில் இமேஜ்களைக் காட்டுவதற்கான டிஸ்பிளே தொழில் நுட்பம். டிஜிட்டல் வாட்ச் முதல் தட்டையான ஸ்கிரீன் மானிட்டர் மற்றும் எல்சிடி டிவிக்களில் இது பயன்படுத்தப்படுகிறது.

யு.எஸ்.பி. (USB): வெளியிலிருந்து கம்ப்யூட்டருக்கான துணை சாதனங்களை அதனுடன் இணைக்கும் ஒரு தரப்படுத்தப்பட்ட வழி. இதன் மூலம் மெமரி டிரைவ், ஹார்ட் டிஸ்க், கேமரா, மொபைல், பிரிண்டர், கீ போர்டு எனக் கம்ப்யூட்டருடன் இணைக்க வேண்டிய எந்த சாதனத்தையும் இணைக்கலாம்.

டிசம்பரில் மொபைல் இணைய தேடல்

மொத்த இன்டர்நெட் தேடலில், மொபைல் போன் வழியாகத் தேடுவது இப்போது 1.3 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது. சென்ற ஆண்டு இறுதியில், டிசம்பர் மாதத்தில் இந்த தேடல் மிக அதிகமாக இருந்ததாக இவற்றைக் கவனித்து வரும் வெப் மெட்ரிக்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது. சென்ற பிப்ரவரி மாதத்தில், மொத்த இன்டர்நெட் பயன்பாட்டில் 0.57 சதவீதம் ஆக இருந்த மொபைல் வழித் தேடல் தற்போது 1.35 சதவீதம் டிசம்பரில் உயர்ந்தது. இதனால் டெஸ்க்டாப் கம்ப்யூட்டர் வழி தேடல் 99.28சதவீதம் லிருந்து 98.36% ஆகக் குறைந்தது.

மொபைல் வழி இன்டர்நெட் தேடலில் கூகுளின் ஆண்ட்ராய்ட் அதிகம் பயன்படுத்தப்பட்டது. இதன் பயன்பாடு 58.4 சதவீதம். பிளாக்பெரி 22.2 சதவீதம், ஐபோன் 20.1சதவீதம், சிம்பியன் 19.01 சதவீதம் மற்றும் ஜாவா எம்.இ. 15.6 சதவீதம் ஆக இருந்தன.

இந்த வார டவுண்லோட்

இந்த வாரம் உங்களுக்குத் தரப்படும் டவுண்லோட் புரோகிராம் பயர்பாக்ஸ் பிரவுசருக்கான புதிய பயனுள்ள ஆட் ஆன் தொகுப்பு குறித்ததாகும். இப்போது அறிமுகமாகிப் பயன்படுத்தப்படும் இணைய பிரவுசர்கள் அனைத்திலும் டேப் பயன்பாடு தான் அடிப்படையாக உள்ளது. டேப் ஒவ்வொன்றிலும் ஒரு தளம் காணப்படுவதும், அதனைத் தேவைப்படுகையில் கிளிக் செய்து பயன்படுத்துவதும் நம் வைக்க வேண்டிய டேப்பினை இழுத்து வந்து இந்த டூல்பாரில் விட்டுவிடலாம். அல்லது அப்போது திறக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கும் டேப்பில் இடது பக்கம் உள்ள மேல் நோக்கி உள்ள ஸ்டைலான அம்புக் குறியில் கிளிக் செய்திடலாம். அப்படி கிளிக் செய்தால் அந்த டேப் இந்த டூல்பாருக்கு இழுத்துச் செல்லப்பட்டு வைக்கப்படும். இவ்வாறு இழுக்கப்பட்டு இந்த டூல்பாரில் வைக்கும் டேப் சும்மா இருக்கும். ராம்

டேப்களை மெமரியிலிருந்து விலக்க

வாடிக்கையாகிவிட்டது. ஆனால் எத்தனை டேப்கள் திறக்கப்படுகின்றனவோ, அந்த அளவிற்கு ராம் மெமரி இடம் எடுக்கப்பட்டு காலியாகும். அண்மையில் பார்த்த டூ மெனி டேப்ஸ் (TooManyTabs) என்னும் ஒரு ஆட் ஆன் தொகுப்பு இந்த பிரச்னைக்கும் வழி காட்டுகிறது. தொடர்ந்து பயனபடுத்தாத, ஆனால் தேவைப்படும் டேப்களை, காத்திருக்கும் இடம் ஒன்றை உருவாக்கி அதில் போட்டு வைக்கிறது இந்த புரோகிராம். அவை நம் கண்ணில் படும்படி இருக்கும். ஆனால் செயல்படும் நிலையில் இருக்காது. எனவே ராம் மெமரி காலியாகாது.

இந்த ஆட் ஆன் தொகுப்பு வழக்கமான டேப்களுக்கு மேலாக ஒரு புதிய டூல்பாரினை உருவாக்குகிறது. காத்திருப்பில் போட்டு மெமரியில் இடம் பிடிக்காது. அதற்குப் பதிலாக அந்த டேப்பிற்கான முகவரி ஒரு புதிய புக்மார்க் போல்டரில் அமைக்கப்படும். இதன் மீது கிளிக் செய்தால் அந்த டேப்பிற்கான தளம் திறக்கப்பட்டு செயல்பாட்டிற்குக் கொண்டு வரப்படும்.

இது போல ஆறு வரிசைகளில் இந்த டேப்களைக் கொண்டு சென்று வைக்கலாம். இந்த ஆட் ஆன் புரோகிராம் கிடைக்கும் தளத்தில் இது குறித்த சிறிய வீடியோ பைல் ஒன்றும் உள்ளது. இதனைக் கிளிக் செய்தால், இந்த ஆட் ஆன் தொகுப்பின் முழு பயன்பாட்டினையும் அறிந்து கொள்ளலாம். இது இலவசம். இதனைப் பெற நீங்கள் செல்ல வேண்டிய தள முகவரி: https://addons.mozilla.org/en-US/firefox/addon/9429

வேர்ட் : டிப்ஸ் டிப்ஸ்

பைலின் பெயரை இணைக்க

வேர்ட் டாகுமெண்ட் பைல் ஒன்றை உருவாக்குகிறீர்கள். அதை சேவ் செய்தவுடன், அந்த பைல் உங்கள் கம்ப்யூட்டரில் ஒரு போல்டரில், ஒரு டிரைவில் பதிந்து வைக்கப்படுகிறது. இந்த பைலின் பெயர் மற்றும் பதியப்பட்டு வைக்கும் இடம் டாகுமெண்ட்டில் குறிப்பிட்ட இடத்தில் காட்டப்பட்டால் நல்லது எனத் திட்டமிடுகிறீர்கள். நீங்களாக இதனை டைப் செய்திட வேண்டாம். அதற்கென செட்டிங்ஸ் ஒன்றை அமைத்துவிட்டால் போதும். இதனை டாகுமெண்ட்டில் உள்ள புட்டரில் கூட அமைத்துவிடலாம். அச்செடுக்கையில் பைலின் பெயர் கீழாகக் காட்டப்படும் அல்லவா! இனி எப்படி இதனை செட் செய்திடலாம் என்று பார்க்கலாம்.

1. எந்த இடத்தில் பைலின் பெயர் அமைக்கப்பட வேண்டுமோ, அந்த இடத்தில் கர்சரைக் கொண்டு வைக்கவும்.

2. அடுத்து மெனுபாரில் இன்ஸெர்ட் (Insert) அழுத்தவும்.

3. இதில் பீல்டு (Field) என்னும் பகுதியைத் தேர்ந்தெடுக்கவும்.

4. இங்கு மேலாக Please Choose a Field என்று ஒரு பிரிவு இருக்கும். அதிலேயே அடுத்த பிரிவாக Field Names என்று இருக்கும். இதனைத் தேர்ந்தெடுக்கவும்.

5. இதில் File Name என்பதில் கிளிக் செய்க.உடன் அருகில் ஒரு பாக்ஸ் காட்டப்படும். அதில் பைல் பெயர் எப்படிக் காட்டப்பட வேண்டும் என்பதற்கு பெரிய(கேப்பிடல்) எழுத்துக்கள், சிறிய எழுத்துக்கள், அல்லது வழக்கமான சொற்கள் போல என்ற பிரிவுகளில் ஒன்றை நீங்கள் தேர்ந்தெடுக்கலாம். இது Field Properties என்ற பிரிவில் காட்டப்படும்.

6. இதனை அடுத்து Field Options என்ற பிரிவைப் பார்க்கலாம். அதில் சிறிய கட்டம் ஒன்றுடன் Add path to File Name என்று இருக்கும். இதில் டிக் அடையாளத்தை ஏற்படுத்தினால், உங்கள் பைல் எந்த டிரைவில், எந்த போல்டரில் உள்ளது என்ற விவரங்களுடன் பைல் பெயர் இடம் பெறும்.

உங்களிடம் வேர்ட் 2007 இருந்தால் கீழ்க்கண்டபடி செட் செய்திடவும்.

1. டாகுமெண்ட்டைத் திறந்து எந்த இடத்தில் பைல் பெயர் வேண்டுமோ அந்த இடத்தில் கர்சரை வைத்திடவும்.

2. அடுத்து ரிப்பனில் இன்ஸெர்ட் டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும்.

3. டெக்ஸ்ட் குரூப்பில் Quick Parts என்னும்



டூலில் கிளிக் செய்திடவும்.

4. Field என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் பீல்ட் டயலாக் பாக்ஸைக் காட்டும்.

5. இதில் கிடைக்கும் கேடகிரி லிஸ்ட்டில் (Document Information) டாகுமெண்ட் இன்பர்மேஷன் என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

6. பின் File Name என்பதை Insert Field Type லிஸ்ட்டில் இருந்து தேர்ந்தெடுக்கவும்.

7. இப்போது என்னும் பட்டனில் கிளிக் செய்திடவும். வேர்ட் உடனே டயலாக் பாக்ஸ் டிஸ்பிளேயை மாற்றும்.

8. இதில் Options என்பதில் கிளிக் செய்திடவும். இப்போது Field Options என்ற டயலாக் பாக்ஸ் கிடைக்கும்.

9. அடுத்து Field Specific என்ற டேப்பில் கிளிக் செய்திடவும்.

10. இப்போது \p என்ற ஆப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். இதன் மூலம் பைல் உள்ள டைரக்டரிக்கான பாத் என்னும் வழி முழுவதையும் தேர்ந்தெடுக்க அமைக்கக் கட்டளை தரப்படுகிறது.

11. அடுத்து Add to கிளிக் செய்திடவும்.

12. அடுத்து பீல்ட் ஆப்ஷன்ஸ் டயலாக் பாக்ஸை மூட ஓகே கிளிக் செய்திடவும்.

13. மீண்டும் ஒருமுறை ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

அந்த நடு வீல்

மவுஸ் சாதனத்தில் மூன்று பட்டன்கள் இருந்தன. பின் அவை இரண்டாகின. பின் இரண்டுக்கு நடுவே ஒரு வீலுடன் வந்தன. இந்த ஸ்குரோல் வீல் என அழைக்கப்படும் சிறிய சக்கரம், பல்வேறு செயல்பாடுகளுக்குப் பயன்படுகிறது என நாம் அறிவோம். ஆனால் அதன் பயன்கள் அனைத்தையும் நாம் அனுபவிக்கிறோமா என்று பார்க்கலாம்.

1. **பிரவுசர் டேப் குளோஸ்:** இப்போது பிரவுசர்களெல்லாம் டேப்களைப் பயன் படுத்துகின்றன. ஒரே நேரத்தில் பல தளங்களைத் திறந்து வைத்துப் பயன்படுத்தலாம். அவை ஒவ்வொன்றும் ஒரு டேப்பில் காட்டப்படும். சில தளங்களை மூட நினைப்போம். சில அந்த டேப்பில் கிளிக் செய்து, திறந்து பின் மூடுவார்கள். சிலர் அந்த டேப்பினைத் திறக்காமல் அதன் ஓரத்தில் உள்ள சிறிய நட்சத்திர அடையாளத்தில் கிளிக் செய்திடுவார்கள். எதுவும் வேண்டாம். இன்டர்நெட் எக்ஸ்புளோரரிலும், பயர்பாக்ஸிலும் உள்ள டேப்களில், டேப் நடுவே ஸ்குரோல் வீலால் ஒரு கிளிக் செய்தால் அந்த டேப் மூடப்பட்டுவிடும்.

2. **லிங்க் கிளிக்:** இணைய தளம் ஒன்றுக்கு லிங்க் ஒன்றினைப் பார்க்கிறீர்களா! அதன் மீது ஸ்குரோல் வீலை வைத்து கிளிக் செய்தால், அந்த லிங்கிற்கான தளம்,புதிய டேப்பில் திறக்கப்படும். கண்ட்ரோல் கீயை அழுத்திக் கொண்டு,மவுஸின் இடது பட்டனைக் கிளிக் செய்தாலும், நமக்கு தளம் புதிய டேப்பில் கிடைக்கும்.

3. **மொத்தமாக டேப் திறக்க:** பயர்பாக்ஸ் மற்றும் இன்டர்நெட் எக்ஸ்புளோரரில் அதிக எண்ணிக்கையிக் புக்மார்க்குகளை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். ஒவ்வொரு நாளும் சில தளங்களைத் திறந்து பார்க்க வேண்டிய சூழ்நிலை. அவை அனைத்தையும் ஒரு போல்டரில் வைத்துள்ளீர்கள். நல்ல ஐடியா, முயற்சி. இந்த போல்டரைத் திறந்து அந்த புக்மார்க்குகள் ஒவ்வொன்றையும் வேகமாகத் திறக்கிறீர்கள். இந்த சுற்று வேலை வேண்டாம். அந்த போல்டரில் ஸ்குரோல் வீலைக் கொண்டு கிளிக் செய்திடுங்கள். அனைத்து தளங்களும் ஒவ்வொன்றும் ஒரு டேப்பில் திறக்கப்படும்.

4.**பக்கத்தை நகர்த்த:** வேர்ட், எக்ஸெல், அடோப் அக்ரோபர் ரீடர்,பயர்பாக்ஸ், இன்டர்நெட் எக்ஸ்புளோரர் மற்றும் சில இது போன்ற அப்ளிகேஷன் புரோகிராம்களில், மவுஸின் ஸ்குரோல் வீலினை அழுத்தியவாறே பிடித்திருந்தால் என்ன ஆகும்? கிளிக் செய்து பிடித்தவாறே இழுத்திடுங்கள். பக்கங்கள் நீங்கள் இழுப்பதற்கேற்றபடி மேலும் கீழுமாகச் செல்லும்.

பயர்பாக்ஸ் பேட்ச் பைல்

அண்மையில் பயர்பாக்ஸ் 3.5.6 பிரவுசரில் உள்ள பல பிரச்னை களைத் தீர்க்கும் அப்டேட் பேட்ச் பைல் ஒன்றை, மொஸில்லா வெளியிட் டுள்ளது. இவற்றில் சில மிக ஆபத்தான வையாக இருந்தன. 62 இடங்களில் பிழை கண்டறியப் பட்டு, இந்த பேட்ச் பைல் மூலம் சரி செய்யப் பட்டுள்ளன. இதனுடன் கிடைத்துள்ள வெளியீட்டுக் குறிப்புகளில், பயர்பாக்ஸ் பிரவுசரில் மிக மிக முக்கியமான மூன்று பிழைகள் இதில் சரி செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப் பட்டுள்ளது. அனைத்து ஆப்பரேட்டிங்

சிஸ்டங்களிலும் செயல் படுகையில் பயர்பாக்ஸ் பிரவுசர் மெமரியில் பிரச்னைகளை ஏற்படுத் தியது எனவும், அது சரி செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவை தவிர 62 இடங்களில் இருந்த சில குறைகளும் களையப்பட்டுள்ளன. இந்த பேட்ச் பைலை கீழ்க்காணும் முகவரியில் உள்ள தளத்திலிருந்து இறக்கிப் பயன்படுத்தலாம்.

http://en-us.www.mozilla.com/en-US/products/download.html?product=firefox-3.5.6&os=win&lang=en-US

இதனால் நமோரகா (Namoroka) என்ற பெயரில் வெளியிடப்படப் போவதாக இருந்த பயர்பாக்ஸ் பிரவுசர் பதிப்பு 3.6 இன்னும் கொஞ்சம் தள்ளிப் போகும் என்று தெரிகிறது.

விண்டோஸ் டிப்ஸ்

விண்டோஸ் இயக்கத்தில் நேரத்தை மிச்சப்படுத்தி விரைவாகச் செயல்பட பல செயல்பாடுகள் உள்ளன. அவற்றில் மிகச் சிறந்தவற்றை இங்கு பட்டியலிடலாம்.

ஆல்ட் + டேப் (Alt+Tab) அழுத்தி, திறந்திருக்கும் புரோகிராம்களிடையே அடிக்கடி நீங்கள் மாறிக் கொள்ளலாம். மவுஸை எடுத்துக் கர்சரைக் கொண்டு சென்று கிளிக் செய்திடும் நேரம் மிச்சம்.

ஒரு அப்ளிகேஷனில் பல பைல்களைத் திறந்து வைத்திருந்தால் அவற்றிற்கு இடையே செல்ல கண்ட்ரோல் + டேப் (Control+Tab) பயன்படுத்தவும்.

புரோகிராம்கள் எங்கு இருக்கின்றன என்று தேடி அறிந்து திறக்க வேண்டாம். ரன் பாக்ஸில் அவற்றின் பெயரை டைப் செய்திடுங்கள். Calculator, Control Panel, Paint என டைப் செய்தாலே இந்த புரோகிராம்கள் எல்லாம் கிடைக்கும். இதே போல பல புரோகிராம்களைப் பெறலாம்.

பைல்களின் இடம், வகை தெரிய, அவற்றின் பெயரிலேயே அவற்றைக் காட்டும் வகையில் செட் செய்திடலாம். இதனால் பைல் இடம் தேடி அலைய வேண்டியதில்லை. விண்டோஸ் எக்ஸ்புளோரரில் ஆர்கனைஸ் (Organize) மெனுவில் உள்ள Folder Options என்பதில் கிளிக் செய்திடவும். இங்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கும் பைல்கள், பைல் இருக்கும் இடத்தின் முழு வழி, பைல் எக்ஸ்டென்ஷன் மற்றும் பல பைல் விஷயங்களைப் பைல் பெயரில் காட்டும்படி அமைக்கலாம்.

டாஸ்க் பாரினை சற்று அதிக தகவல் உள்ளதாக மாற்றம் செய்திடலாம். டாஸ்க்பாரில் காலியாக உள்ள இடத்தில் ரைட் கிளிக் செய்திடுங்கள். அதில் கிடைக்கும் மெனுவில் Properties என்பதில் கிளிக் செய்திடுங்கள். கிடைக்கும் சிறிய விண்டோவில் பழைய வகை ஸ்டார்ட் மெனுவிற்குச் செல்ல, எந்த ஐகான்கள் நோட்டிபிகேஷன் ஏரியாவில் வைத்திட, ஸ்டார்ட் பார் மெனுவில் டிபால்ட் புரோகிராம்களாக எவற்றை இணைத்திட என்று பல வழிகளுக்கான திறவுகோல்கள் இருக்கும். இவற்றைக் கிளிக் செய்து டாஸ்க் பாரைச் சிறப்பாகப் பயனுள்ளதாக மாற்றி அமைக்கலாம்.

உங்கள் ஹார்ட் டிரைவைப் பார்ட்டிஷன் மூலம் பிரிக்கையில் ஆப்பரேட்டிங் சிஸ்டத்திற்கென ஒரு பிரிவை வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் அப்ளிகேஷன் புரோகிராமிற்கு ஒரு பிரிவினையும், உருவாக்கப்படும் பைல்களுக்கு ஒரு பிரிவினையும் வைத்துக் கொள்ளுங்கள்.

சிறப்பான குறியீடுகள் வேண்டுமா? ரன் பாக்ஸில் கேரக்டர் மேப் (char map) என டைப் செய்து கிடைக் கும் பாண்ட்ஸ் வின் டோ வை ப் பயன் படுத் தி, சிறப்புக் குறியீடுகளைக் காப்பி செய்து, பேஸ்ட் செய்து பயன்படுத்தலாம்.

திரைக் காட்சிகளை அப்படியே படம் பிடித்து பைலாக மாற்றி அனுப்ப பிரிண்ட் ஸ்கிரீன் அழுத்தவும். பின் படங்களைப் பேஸ்ட் செய்திடும் எந்த புரோகிராமிலும் இதனைப் பேஸ்ட் செய்து பட பைலாக மாற்றிக் கொள்ளலாம். பெரிய அளவில் கூடுதலான பிக்ஸெல்களுடன் தேவை எனில் பி.எம்.பி. பைலாக மாற்றலாம். எளிய இமெயில் உடன் அனுப்ப வேண்டும் எனில் ஜேபெக் அல்லது டிப் பைலாக மாற்றி வைத்துக் கொண்டு பயன்படுத்தலாம்.

புரோகிராம்களை இயக்க ஷார்ட் கட்களைப் பயன்படுத்துங்கள்.

அப்ளிகேஷன் ஐகானில் ரைட் கிளிக் செய்து, ப்ராபர்ட்டீஸ் மெனு பெறவும். பின் ஷார்ட் கட்ஸ் டேப் கிளிக் செய்து, கிடைக்கும் ஷார்ட் கட் ஐகானைத் திரையில் வைத்து, கிளிக் செய்து இயக்கவும்.

ஒரு சிலருக்கு இரண்டு கீகளை ஒரு சேர அழுத்துவது சற்று சிரமமாக இருக்கும். ஆனால் பல செயல்பாடு கள், இது போல இரண்டு கீகளை அழுத்துவதன் மூலம் தான் நிறைவேற்ற முடிகிறது. ஏன் ஒரு கீயினை (எ.கா. கண்ட்ரோல், ஷிப்ட், ஆல்ட் போல) அழுத்திப் பின் விரலை எடுத்து அடுத்த கீயை அழுத்தக் கூடாது. செய்யலாமே! இதற்கு ஸ்டிக்கி கீ செயல்பாடு என்று பெயர். இதனை இயக்க ஷிப்ட் கீயினை ஐந்து முறை அழுத்தவும். ஸ்டிக்கி கீ செயல்பாடு தொடங்கும். பின் நீங்கள் கண்ட்ரோல் + சி அழுத்த, கண்ட்ரோல் கீயை அழுத்தி பின் சி கீயினை அழுத்த லாம். இப்படியே, ஷிப்ட், ஆல்ட், விண்டோஸ் கீகளை அழுத்தி செயல்படுத்தலாம்.

இந்த வசதியை நிறுத்த விரும்பினால் மீண்டும் ஷிப்ட் கீயினை ஐந்து முறை அழுத்தவும்.

"கவனத்திற்கு"

நோட்டிபிகேஷன் ஏரியா (Notification Area): ஸ்கிரீனின் கீழ்ப்புறமாக விண்டோ ஸின் எந்த புரோகிராம்கள் பின்புலத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று காட்டும் இடம்.

திரையில் நெட்டுக் குத்தாக இரண்டு திரைப் பிரிவுகளை வைத்துக் கொண்டு, அவற்றில் இரண்டு புரோகிராம்களை மாற்றி, மாற்றி இயக்க வேண்டுமா?

விண்டோ ஒன்றில் புரோகிராம் ஒன்று திறந்திருக்கையில், கண்ட்ரோல் கீயை அழுத்திக் கொண்டு, திறக்க விரும்பும் இன்னொரு புரோகிராமின் டாஸ்க் பாரில் உள்ள டேப் மேல் கிளிக் செய்திடவும். பின் டாஸ்க்பாரில் உள்ள காலியான இடத்தில், ரைட் கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில் Tile Vertically என்பதைத் தேர்ந்தெடுக் கவும்.

கண்ட்ரோல் பேனலில் அனைத்தையும் ஒரு சேரக் காட்டும் பழைய காட்சித் தோற்றம் வேண்டுமா? விண்டோஸ் எக்ஸ்பி, விஸ்டா ஆகியவற்றில் கண்ட்ரோல் பேனலைத் திறந்து Switch to Classic View என்பதில் கிளிக் செய்திடவும். விண்டோஸ் 7 சிஸ்டத்தில் View by என்பதில் கிளிக் செய்து, மேல் வலது மூலையில் கிடைக்கும் ட்ராப் மெனுவில், நீங்கள் விரும்பும் தேவைக்கேற்ற பிரிவைத் தேர்ந்தெடுக்கவும்.

370 பாஸ்வேர்டுகளுக்கு ட்விட்டர் தடை

சோஷியல் நெட்வொர்க் தளமான ட்விட்டர் 370 பாஸ்வேர்டுகளுக்குத் தடை விதித்துள்ளது. எளிதாக யாரும் கண்டுகொள்ளத்தக்க வகையில் உள்ள பாஸ்வேர்டுகளாகச் சிலவற்றை ஒதுக்கியுள்ளது. எடுத்துக் காட்டாக 123456 மற்றும் Password என்பவை எல்லாம் மற்றவர்கள் எளிதில் கண்டுகொள்ளத்தக்க சொற்களாகும். இதே போல பிரபலமான கார்களின் பெயர்கள் மற்றும் மக்கள் அன்றாடம் சந்திக்கும் சொற்களையும் இந்த பட்டியலில் கொடுத்துள்ளது. நல்ல பாஸ்வேர்ட் ஒன்று எழுத்துக்கள், இலக்கங்கள் மற்றும் சிறப்புக் குறியீடுகள் ஆகியவை கலந்ததாக இருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியுள்ளது.

சமுதாய தளங்களின் இலக்கு மாறிய 2009

நடந்து முடிந்த 2009 ஆம் ஆண்டு, இணையத்தில் சமுதாய தளங்கள் என்று அழைக்கப்படும் சோஷியல் நெட்வொர்க் தளங்களுக்கு ஒரு சிறப்பான ஆண்டாக அமைந்திருந்தது. பேஸ்புக் மற்றும் ட்விட்டர் (twitter) போன்ற தளங்களின் அமைப்பிலும், உட்பொருளிலும் பெருத்த மாற்றங்களும் முன்னேற்றமும் ஏற்பட்டன.



அதுவரை என்ன பீட்ஸா சாப்பிட்டேன்; எந்த தேர்வில் பிரச்னை அதிகம் இருந்தது; தீம் பார்க்கில் ஏன் பெண்கள் கூட்டம் அதிகம் போன்ற கதைகள் இல்லாமல், உலகத்தைப் பாதித்த, பாதிக்கின்ற விஷயங்கள், அரசியல் மாற்றங்கள், விமான விபத்துக்கள், அரசியல் நிகழ்வுகள் போன்றவை அதிக இடம் பெற்றன.

பொதுவாக இளைஞர்களும், டீன் ஏஜ் கல்லூரி மாணவர்களும் அதிகம் பயன்படுத்திக் கொண்டிருந்த இந்த சோஷியல் தளங்களில் பல அனுபவஸ்தர்களும் எழுதத் தொடங்கினார்கள். இதனால் பழைய தலைமுறை அனுபவ வாதிகளுக்கும், புதிய இளைய தலைமுறைக்கும் இடையே நல்ல ஆரோக்கியமான நட்பு ஏற்பட்டது. ஒரு குடும்பம் என்று எடுத்துக் கொண்டால் அம்மா, அப்பா ஏன் பாட்டி கூட ட்விட்டரிலும், பேஸ்புக்கிலும் இடம் பிடித்து கருத்துக்களைப் பரிமாறத் தொடங்கினர்.

இந்த தளங்களைப் பயன்படுத்தும் இணைய நேயர்களின் எண்ணிக்கை 2009ல் அதிகமாகியது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் பேஸ்புக் தன் 35 ஆவது கோடி பயனாளியை அடையாளம் காட்டியது. ஏப்ரல் மாதத்தில் இந்த தளத்தின் பயனாளர்கள் 1390 கோடி நிமிடங்கள் தளத்தைப் பயன்படுத்தி உள்ளனர். இது சென்ற 2008 ஆம் ஆண்டைக் காட்டிலும் 700 சதவீதம் கூடுதலாகும்.

பேஸ்புக் நேயர்கள் எண்ணிக்கை உயர்ந்தது என்றால், நிச்சயம் வேறு ஒரு தளத்திலிருந்து இங்கு வந்தவர்களா கத்தான் இவர்கள் இருப்பார்கள். இவர்களில் பலர் மை ஸ்பேஸ் (space) தளத்திலிருந்து வந்தனர். சோஷியல் நெட்வொர்க்கிங் தளங்களில் முன்னணி தளமாக, முதலில் வந்த சிலவற்றில் ஒன்றாகும் இது. ஆனால் 2009ஆம் ஆண்டில், இதன் பங்கு 55 சதவிதத்திலிருந்து 30.26 சதவீதம் ஆகக் குறைந்தது.

இந்த ஆண்டில் இந்த இரு தளங்களும் தங்கள் வருமானத்தைப் பெருக்கும் முயற்சியில் ஈடுபடும் எனத் தெரிகிறது. அதற்கான முயற்சிகளில் பல ஒப்பந்தங்களில் இவை ஈடுபட்டு வருகின்றன.

‘டிவி’க்களில் ஸ்கைப்

வாய்ஸ் ஓவர் புரோட்டோகால் தொழில் நுட்பத்தின் உதவியுடன் இன்டர்நெட் இணைப்பில் உள்ள இருவர், தங்களின் பெர்சனல் கம்ப்யூட்டர், மொபைல் போன், கார்ட்லெஸ் போன், வீடியோ போன் ஆகியவற்றின் மூலம் திரையில் ஒருவரை ஒருவர் பார்த்து உரையாடிக் கொள்ளலாம். இதனால் ஆயிரக்கணக்கான மைல்கள் தள்ளி இருப்பவர்கள் கூட ஒரே அறையில் அமர்ந்து பேசுவது போன்ற நிலை ஏற்பட்டு வருகிறது. இந்த வகையில் இலவச அப்ளிகேஷன் புரோகிராம்களைப் பல நிறுவனங்கள் அளித்து வந்தாலும், ஸ்கைப் இதில் முன்னணி இடம் பிடித்துள்ளது.

இனி இந்த வகைத் தொடர்பினை, ‘டிவி’க்கள் வழியாகவும் தருவதற்கு ஸ்கைப் முன்வந்துள்ளது. முதன் முதலாக ‘டிவி’க்களில் இந்த தொழில் நுட்பத்தினை ஸ்கைப் கொண்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தத்தினை எல்.ஜி. மற்றும் பானாசோனிக் நிறுவனங்களுடன் மேற் கொண்டுள்ளது. இந்த இரு நிறுவனங்களும் இன்டர்நெட் வசதி இணைந்த ‘டி.வி’க்களைத் தயாரித்து வழங்கி வருகின்றன.

இணையத் தொடர்பினை மேற்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்படும் தொலைக் காட்சிப் பெட்டிகள் மூலம் வீடியோ அழைப்புகளை மேற்கொள்ளலாம். இதற்கான புரோகிராமினை ஸ்கைப் வழங்குகிறது. பானாசோனிக் நிறுவனம் இது பற்றிக் கூறுகையில் தங்களின் 2010 Viera Cast-enabled HDTV செட்களை வைத்திருப் பவர்கள் இந்த தொழில் நுட்பத்தை எளிதில் பயன்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளது. வர்த்தக ரீதியாகப் பொது மக்களுக்கு இந்த வகை ‘டிவி’க்கள் வரும் மாதங்களில் கிடைக்கும். எல்.ஜி. நிறுவனம் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் Netcast Entertainment Access தொழில் நுட்பம் உள்ள தங்கள் நிறுவனத்தின் 26 மாடல் எல்.இ.டி., எல்.சி.டி. மற்றும் பிளாஸ்மா டிவிக்களில் ஸ்கைப் புரோகிராமினைப் பயன்படுத்தி வீடியோ கால்களை மேற்கொள்ளலாம் என்று கூறியுள்ளது.

வீடியோ அழைப்புகளை இந்த ‘டிவி’க்கள் மூலம் மேற்கொள்ள, இந்த இரு நிறுவனங்களும், மைக்ரோபோன் இணைந்த வீடியோ கேமராக்களை ‘டிவி’க்களில் இணைக்கும் வகையில் வடிவமைத்துத் தர இருக்கின்றன. இன்டர்நெட் இணைப்பு குறித்துக் கூறுகையில் குறைந்தது விநாடிக்கு 1 மெகா பிட் வேகம் உள்ள இணைப்பு வேண்டும் என ஸ்கைப் அறிவித் துள்ளது. ஸ்கைப் இணைக்கும் வகையில் உள்ள டிவிக்களை எல்.ஜி. வரும் ஏப்ரல் மாதத்திற்குள்ளும், ஸ்கைப் இணைந்த எச்.டி.டி.விக்களை வரும் மார்ச் மாதத்திற்குள் பானாசோனிக்கும் தருவதாக உறுதி அளித்துள்ளன.

இதுவரை உயர் தொழில் நுட்ப ஆய்வு மையங்கள், சில சிறப்பு கருத்தரங்க அமைப்புகளில் மட்டுமே பயன்படுத்தப் பட்டு வந்த இந்த தொழில் நுட்பம் மக்களுக்காக வர்த்தக ரீதியில் கிடைக்கப் போகிறது என்பது, தொலை உணர்வு வசதியை மக்களுக்கு அளிப்பதில் நாம் இன்னும் ஒரு படி உயர்கிறோம் என்பதைக் காட்டுகிறது.

இனி பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவில் வசிக்கும் தங்கள் பிள்ளைகளை, பெற்றோர்கள் தங்கள் டிவி திரைகள் மூலம் தங்களின் வீடுகளுக்கே கொண்டு வந்து பார்த்துப் பேசி மகிழலாம்.

இனி எல்லாமே இன்டர்நெட் அடிப்படையில் தான் இயங்கும் என்பது, தாங்கள் அளித்துள்ள புத்தாண்டு கம்ப்யூட்டர் மலரிலிருந்து தெரிகிறது. அரசு இன்னும் குறைவான கட்டணத்தில் இன்டர்நெட் இணைப்பை வழங்க வேண்டியது மிக அவசியம்.

–எஸ். தங்கவேலன், சென்னை

கம்ப்யூட்டர் வேலை செய்வதில் எல்லா பிரிவுகளிலும் மாற்றங்கள் இருக்கப் போகிறது. அவை நம் வாழ்க்கையை வசதியாக மாற்றப் போகின்றன என்று காட்டியுள்ளீர்கள். நினைக்கவே இனிக்கிறது.

–எஸ். ஆர். சிவலட்சுமி, திருநின்றவூர்

2010ல் வெளியான கம்ப்யூட்டர் மலரில் நிறைய புதிய விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். இந்த தருணத்திலாவது பக்கங்களைக் கூட்டக் கூடாதா!

–ஆ. ஜெயக்குமார், கோயம்புத்தூர்

தகவல் பறக்கும் பாதை – ஒரு சிறந்த பாடநூல் கட்டுரை போல எழுதப்பட்டுள்ளது. அனைத்து மாணவர்களும் படித்தறிய வேண்டிய ஒன்று. வாழ்த்துக்கள்.

–சி. நமசிவாயம், மே.நி.பள்ளி ஆசிரியர், சிவகாசி

கம்ப்யூட்டர் அடிப்படை அலகு மூலம் விஷயங்களைப் புரிய வைத்த உங்களுக்கு நன்றி. நல்ல விளக்கம். இதே போல கம்ப்யூட்டரின் மற்ற அடிப்படை விஷயங்களையும் எடுத்துக் காட்டுகளுடன் எழுதவும்.

–பி.ராஜசேகரன், மதுரை

ஆன்லைன் கிரிமினல்கள் 470% உயர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். இந்த நவீன யுகத்தில் இதைத் தடை செய்திடவே முடியாதா? அல்லது சட்டங்களைக் கடுமையாக்க முடியாதா?

–ஏ. ஞானசேகரன், திருப்பூர்

ஆன்லைன் வீடியோ வகுப்பறைகள் தரும் இணைய தளம் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. எல்லா பிரிவு மாணவர்களுக்கும் ஏதாவது உள்ளது இதன் சிறப்பு. டாக்டரான எனக்கு அதிகம் உதவியது.

–டாக்டர் சி.மகேஷ், கோயம்புத்தூர்

வெகுநாட்களாக கிளிக் டு ஆக்டிவேட் குறித்து பயம் இருந்தது. அதனைப் போக்கும் வகையில் உங்கள் குறிப்பு உள்ளது.

–கே. ஆர். சிவராஜ், தாயில்பட்டி

மொபைல் போன் திரை குறித்த தங்கள் பதிலை விரிவாக்கி கட்டுரையாகத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

–ஆ. திருமாறன், ஸ்ரீவில்லிபுத்தூர்

ஒவ்வொரு மலரிலும் ஒரு பக்கேஜ் (வேர்ட், எக்ஸெல், பயர்பாக்ஸ், கூகுள் போல) ஷார்ட் கட் கீ தொகுப்பு கொடுத்தால் அதிக பயன் கிடைக்கும். சமையல் குறிப்பு போல நன்றாகப் பயன்படுகிறது.

–ஜே. சிவராணி, புதுச்சேரி

இன்டர்நெட் டிவி என்ன விலையில் கிடைக்கும். இதில் நாம் வழக்கம்போல இன்டர்நெட் வேலைகளை மேற்கொள்ளலாமா? அப்படியானால் பிரவுசர் தேவை இல்லையா? தகவல் கொடுங்கள்.

–கே.எம். உசேன், காரைக்கால்

தயவு செய்து பள்ளி மாணவர்களை முன்னிலைப் படுத்தி கட்டுரைகள், குறிப்புகள் தரவும். இதை அன்பு வேண்டுகோளாக ஏற்று செயல்படுத்தவும்.

–அரசு மேல்நிலைப் பள்ளி மாணவர்கள், மேலூர்

மொபைல் போன்கள் குறித்த தகவல்களை இன்னும் சில பக்கங்கள் கூட்டவும். அதில் இன்டர்நெட் இயக்குவது குறித்த தகவல்களைத் தரவும்.

–ஏ. என். ஜெகதீசன், விழுப்புரம்

ஸென் மொபைல் டூயல் சிம் போன்

ஜி.எஸ்.எம். மற்றும் சி.டி.எம்.ஏ. வகை சிம்களை ஒரே நேரத்தில் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்ட மொபைல் போன் ஒன்றை ரூ.3,299 விலையில் விற்பனைக்கு வெளியிட்டுள்ளது. இதில் ஜி.எஸ்.எம் + ஜி.எஸ்.எம். அல்லது சி.டி.எம்.ஏ. சிம்களைப் பயன்படுத்தலாம். மைக்ரோமாக்ஸ் நிறுவனம், பிளாக் பெரி போனைப் போல க்யூ 3 என்ற போனை வெளியிட, ஸென் மொபைல் அதனைப் போல தோற்றத்துடன் இந்த போனை வெளியிட்டுள்ளது. குவெர்ட்டி இஸட் 77 (QWERTY Z 77) என்ற பெயரில் வெளி வந்துள்ள இந்த போன் 111.5 X 60 X 13.3மிமீ என்ற அளவுகளில் வடிவமைக் கபட்டுள்ளது.

2.2 அங்குல வண்ணத்திரை, டிஜிட்டல் ஸூம், பலவகை மோட் மற்றும் சிறப்பு வசதிகளுடன் கூடிய 1.3 மெகா பிக்ஸெல் கேமரா, வீடியோ இயக்கம் ஆகிய வசதிகள் தரப்பட்டுள்ளன. திரை பெரிதாக உள்ளதால் இன்டர்நெட் தேடலை எளிதாக மேற்கொள்ள முடிகிறது. மேலும் இதில் எம்பி4 பிளே பேக் வசதி உள்ளதால், வீடியோ மற்றும் திரைப்படக் காட்சிகளையும் சிறப்பாகக் காணலாம். இந்த போனில் உள் நினைவகம் இல்லை.ஆனால் 500 முகவரிகள் மற்றும் 700 எஸ்.எம்.எஸ். செய்திகளைத் தேக்கி வைக்கலாம். மைக்ரோ எஸ்.டி. கார்ட் மூலம் 4 ஜிபி வரை கொள்ள முடியும். இதில் வயர்லெஸ் எப்.எம். ரேடியோவும் தரப்பட்டுள்ளது.

இதன் கூடுதல் (1200MAH) திறன் கொண்ட பேட்டரி, இந்த போனில் தொடர்ந்து ஐந்து மணி நேரம் பேச இடம் அளிக்கிறது. 3.5 மிமீ ஹெட்போன் சாக்கெட், ஜாவா மற்றும் ஜி.பி.ஆர்.எஸ். தொழில் நுட்பம், எக்ஸ்டெர்னல் ஸ்பீக்கர் மற்றும் ஆப்பரா பிரவுசர் ஆகியவை கூடுதல் வசதிகளாகும்.

இந்த மொபைல் போனை இந்தியாவில் டெலிகேர் நெட்வொர்க் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனம் விநியோகிக்கிறது. இதன் விலை ரூ. 3,300 மட்டுமே.

மொபைல் சேவைக் கட்டணம் வெகுவாகக் குறையும் இந்த நாளில், அதிகமான நுகர்வோர்கள் கிராமப் புறங்களில் இவற்றைப் பயன்படுத்த முன் வருகின்றனர். கட்டணக் குறைப்பை அனுபவிக்க இரண்டு வகை சிம்களையும் பெற்றிருப்போர் இந்த வகை மொபைல் போனை வாங்கலாம் என்ற இலக்குடன் ஸென்மொபைல் இதனை வெளியிட்டுள்ளது.

தற்போது வெளிநாடு மற்றும் உள்நாட்டு மொபைல் தயாரிப்பு நிறுவனங்களின் எண்ணிக்கை 35 என்ற அளவில் உள்ளது. இவற்றில் லெமன், ஸ்பைஸ், மைக்ரோமேக்ஸ் ஆகியவை இந்திய அளவில் கிராமப் புறங்களில் வேகமாக இடம் பெற்று வருகின்றன. ஸென் மொபைல் இந்த பிரிவில் இவற்றுடன் போட்டியிட வந்துள்ளது.

மொபைல் வழி நிதி பரிமாற்றம் உச்சவரம்பு உயர்வு

மொபைல் போன் வழியாக பேங்க் அக்கவுண்ட்களைக் கையாள்கையில், நாள் ஒன்றுக்கு ஒருவர் அதிக பட்சமாக ரூ.15,000 வரை மட்டுமே கையாள முடியும். இந்த உச்சவரம்பை ரூ.50,000 ஆக ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது. மொபைல் போன் வழியாக இன்டர்நெட் இணைப்பு பெற்று, பேங்க் சர்வரை அடைந்து, ஒருவர் தன் அக்கவுண்ட்டில் உள்ள பணத்தை இன்னொரு அக்கவுண்ட்டிற்கு மாற்ற முடியும். பொருட்களை வாங்குவதற்கும், தான் கட்ட வேண்டிய பணத்தை செலுத்துவதற்கும் இதனைப் பயன்படுத்த முடியும். இதற்கான வரைமுறை, அக்கவுண்ட் ட்ரான்ஸ்பருக்கு ரூ.5,000 ஆகவும், தன் செலவினத்திற்கு ரூ.10,000 ஆகவும் இதுவரை இருந்து வந்தது. தற்போது இந்த அதிகபட்ச வரம்பு, இரண்டுக்குமாக ரூ.50,000 என உயர்த்தப்பட்டுள்ளது.

சோனி எரிக்சன் யாரி

நன்றாகப் பொழுது போக்க கேம்ஸ், சிறந்த படங்களை எடுத்துத் தரும் கேமரா, நீண்ட நேரம் தாக்குப் பிடிக்கும் பேட்டரி எனச் சிறந்த அம்சங்களுடன் வெளியாகியுள்ளது சோனி எரிக்சனின் யாரி மொபைல் போன்.

புதுவகையான பெயர்களுடன் வெளியாகியுள்ள சோனி மொபைல் போன்களில் இது மூன்றாவதாகும். மேலும் கேம்ஸ்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளியாகும் சோனி போன்களில் இது இரண்டாவதாகும். முதலில் சோனி எப் 305 அதிக கேம்ஸ்களுடன் வெளியானது. நம் அசைவில் இந்த கேம்ஸ்களை கண்ட்ரோல் செய்திட முடியும் என்பது இதன் சிறப்பு.

பொதுவாக சோனியின் ஸ்லைடர் போன்களில் எந்த குறையும் இருக்காது; அதனை இந்த போனும் நிரூபித்துள்ளது. ரப்பர் கலந்த பின்புற பேனல், முன்புறத்தில் பளபளக்கும் கருப்பு வெள்ளை கலந்த தோற்றம், அழைப்பிற்கான பெரிய கீகள், எளிதாக ஷார்ட்கட் பெறுதல் என்ற வகையில் தனித்துள்ளது இந்த போன். ஆனால் டிஸ்பிளே திரைக்குக் கீழாகத் தேர்ந்தெடுக்கத் தரப்பட்டிருக்கும் கீகள் அநியாயத்திற்கு சிறியதாக எரிச்சலைத் தரும் வகையில் உள்ளது.

இதனுடைய 2.4 அங்குல திரை பளிச் என கேம்ஸ் மற்றும் வீடியோக்களைச் சிறப்பாகக் காட்டுகிறது. வழக்கம்போல யூசர் இன்டர்பேஸ் வண்ணமயமாக, எளிதாக வழி நடத்துகிறது. (இதனால் பேட்டரி திறன் செலவாகும் என நினைத்தால் வேறு வழியில்லை)

மியூசிக் பிளேயர், வழக்கத்தைக் காட்டிலும் கூடுதல் ஆடியோ திறனுடன் இயங்குகிறது. ஐந்து பேண்ட் ஈக்குவலைசர் மற்றும் ஸ்டீரியோவுக்கு மாற்றுதல் ஆகியவையும் நன்றாகச் செயல்படுகின்றன. ஸ்டீரியோ எப்.எம். ரேடியோ மிகத் தெளிவாக ஒலிபரப்பினை எடுத்துத் தருகிறது.

இது ஒரு 3ஜி அலைவரிசையில் இயங்கக் கூடிய மொபைல். இப்போதைக்கு இந்தியாவில் அவ்வளவாக இந்த சேவை இல்லாததால், எட்ஜ் மற்றும் ஜி.பி.ஆர்.எஸ். வசதிகளை நாம் பயன்படுத்தலாம். A2DP இணைந்த புளூடூத் தரப்பட்டுள்ளது.

இதில் கிடைக்கும் 5 மெகா பிக்ஸெல் திறன் கொண்ட கேமரா, தற்போது மொபைல் போன் கேமராவில் உள்ள அனைத்து வசதிகளையும் கொண்டுள்ளது. குறிப்பாக முகம் மற்றும் சிரிப்பு உணர்ந்து செயல்படும் திறனைக் கூறலாம்.

இதன் பேட்டரி குறித்து இங்கு சொல்லியாக வேண்டும். தொடர்ந்து பேசிக் கொண்டே இருந்தாலும் நான்கு மணி நேரம் 15 நிமிடங்கள் தாக்குப் பிடிக்கிறது. சாதாரணமாகப் பயன்படுத்தினால் இரண்டு நாட்கள் வரை இதனை அடுத்த சார்ஜ் செய்திடாமல் பயன்படுத்தலாம்.

இதன் குறியீட்டு விலை ரூ.16,950 என்றிருந்தாலும், ரூ.14,000 என்ற அளவில் பல இடங்களில் கிடைக்கிறது.

மைக்ரோமாக்ஸ் க்யூ3 டூயல் சிம்

வேகமாக டெக்ஸ்ட் அமைக்க குவெர்ட்டி கீ போர்டு மற்றும் இரண்டு சிம்கள் இயக்கம் என்ற இந்த இரண்டு வசதிகள் தான் தற்போது மொபைல் வாங்குவோர் அதிகம் எதிர்பார்க்கின்றனர் என்பதன் அடிப்படையில் மைக்ரோமாக்ஸ் க்யூ3 டூயல் சிம் போன் வெளியாகியுள்ளது. இதன் இன்னொரு சிறப்பு குறைந்த விலை.

இதன் வண்ணத்திரை 220 x 176 ரெசல்யூசனில் 2.2 அங்குல அகலத்தில் உள்ளது. குறைவான எடையில் கையாள்வதற்கு எளிதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் கீ பேட் கீகள் நன்றாக இடம் விட்டு அமைக்கப்பட்டுள்ளன. அழுத்துவதற்குச் சற்று எளிதாக இல்லை என்றாலும், பழக்கத்தில் சரியாகிவிடுகிறது. 1.3 மெகா பிக்ஸெல் கேமரா, சிறிய யு.எஸ்.பி. போர்ட், தனியே சார்ஜிங் போர்ட் என வாடிக்கையாளர்களுக்கு சிரமம் கொடுக்காத வகையில் அனைத்தும் அமைக்க வேண்டும் என்ற இலக்குடன் இந்த போன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதன் மியூசிக் பிளேயருக்கு ஈக்குவலைசர் போன்ற அமைப்புகள் இல்லை என்றாலும், ஆடியோவின் தன்மை நன்றாக உள்ளது. ரெகார்டிங் வசதியுடன் எப்.எம். ரேடியோ இயங்குகிறது. வாய்ஸ் ரெகார்டர் வசதியும் உள்ளது. வீடியோ பிளேபேக் வசதியில் இன்னும் சற்று கவனம் செலுத்தி இருக்கலாம்.

இதன் பிரவுசர் வேகமாக இயங்காவிட்டாலும், ஆச்சரியப்படத்தக்க வகையில் நெட்வொர்க்குடன் இணைந்து

இயங்குகிறது. ஆனால் ஆப்பரா மினி இன்ஸ்டால் செய்தால் வேகம் கூடுகிறது. பி.ஓ.பி.3 மற்றும் ஐமேப் இமெயில்களை எளிதாக டவுண்லோட் செய்திட முடிகிறது. இணைக்கப் பட்டுள்ள A2DP இணைந்த புளூடூத் வசதியும் நல்ல செயல்பாட்டினைக் காட்டுகிறது.

டெக்ஸ்ட் பைல்களுக்கான இபுக் ரீடர், கரன்சி கன்வர்டர், வேர்ல்ட் கிளாக், பொழுது போக்க உதவும் புதிர் கட்ட விளையாட்டு ஆகியவையும் நமக்கு போனஸ் வசதிகளாகக் கிடைக்கின்றன. 2 ஜிபி மெமரி வரை இதில் நீட்டித்துக் கொள்ளலாம். 1.3 எம்பி கேமராவில் எடுக்கும் படங்கள் அவ்வளவு நல்ல தன்மையில் இல்லை.

பேட்டரி சாதாரண பயன்பாட்டில் இரண்டு நாட்களுக்கு தாங்குகிறது. தொடர்ந்து பேசினால் 3 மணி நேரம் பயன்படுத்தலாம்.

குவெர்ட்டி கீ போர்டு, இரண்டு சிம் பயன்பாடு, இணைய நெட்வொர்க் இணைப்பு ஆகியவற்றை இலக்காகக் கொண்டால் ரூ.4,500க்கு இந்த போன் சரியான தேர்வாக அமையும்.

*கவனத்திற்கு: ஐகான் (Icon): ஒரு பைல் அல்லது அப்ளிகேசன் புரோ கிராமினை அடையாளம் காட்டும் சிறிய படம்.

கேள்வி - பதில்

கேள்வி : இன்டர்நெட் எக்ஸ்புளோரர் தொகுப்பில் பல டிப்ஸ்களைப் பயன்படுத்த, மெனு பார் சென்று பைல் கிளிக் செய்து பின் தேவையான பிரிவைத் தேர்ந்தெடுக்கச் சொல்கிறீர்கள். பல வேளைகளில் மெனு பாரே காணாமல் போய்விடுகிறது. அப்போது என்ன செய்வது?

–டி.நமசிவாயம், புதூர், மதுரை

பதில்: இன்டர்நெட் எக்ஸ்புளோரரைத் திறந்து, பின் மேலாகக் காலியாக உள்ள இடத்தில், ரைட் கிளிக் செய்திடவும். அங்கு கிடைக்கும் மெனுவில் favorites, status bar, command bar எனப் பல பிரிவுகள் கிடைக்கும். இதில் Menu bar என்பதற்கு முன் டிக் அடையாளம் உள்ளதா எனப் பார்க்கவும். இல்லை எனில் மவுஸைக் கொண்டு டிக் அடையாளம் ஏற்படுத்தவும். இனி மெனு பார் மேலாக உங்களுக்கு எப்போதும் கிடைக்கும். அடிக்கடி காணாமல் போகிறது என்றால், வேறு ஒருவர் இதனைப் பயன்படுத்துகையில் டிக் அடையாளத்தை எடுத்துவிடுகிறார் என்று தெரிகிறது.

கேள்வி: எம்.எஸ். ஆபீஸ் 2010 பீட்டா தொகுப்பைப் பதித்து இயக்கிப் பார்க்க, கம்ப்யூட்டரின் ஹார்ட்வேரில் கட்டாயம் இருக்க வேண்டிய அம்சங்களைப் பற்றித் தரவில்லையே நீங்கள்? தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

–ஆர். கணேச மூர்த்தி, இராஜபாளையம்

பதில்: ஆம், விட்டுப் போயிற்று. இதோ கீழே தருகிறேன்.

1. வேகமாக இயங்கக் கூடிய இன்டர்நெட் இணைப்பு அவசியம்.

2. கீழே தரப்படும் குறைந்த பட்ச ஹார்ட்வேர் உங்கள் பெர்சனல் கம்ப்யூட்டரில் இருக்க வேண்டும்.

500 MHz 32 அல்லது 64 பிட் ப்ராசசர்; அதற்கும் மேலாக இருப்பது நல்லது. சிஸ்டம் மெமரி 256 எம்.பி. டிஸ்க் ஸ்பேஸ் 3.5 ஜிபி. 1024 x 768 ரெசல்யூசன் அல்லது கூடுதலான ரெசல்யூசனுடன் கூடிய மானிட்டர். டிவிடி ஆர்/டபிள்யூ டிரைவ்.

3. ஆப்பரேட்டிங் சிஸ்டம் கீழ்க் குறித்துள்ளவற்றில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம் – விண்டோஸ் எக்ஸ்பி + சர்வீஸ் பேக் 3 (32 பிட்), விண்டோஸ் விஸ்டா + சர்வீஸ் பேக் 1, விண்டோஸ் 7 – 32 அல்லது 64 பிட்.

டவுண்லோட் செய்த பின் இயக்கிப் பார்க்கையில் பிரச்னைகள் ஏற்பட்டால் மைக்ரோசாப்ட் நிறுவனத்திற்கு மின்னஞ்சல் மூலம் தெரிவிக்கலாம்.

கேள்வி: பயர்பாக்ஸ் தொகுப்பிற்கு தொடர்ந்து ஆட் ஆன் புரோகிராம்கள் உருவாக்கப்பட்டு கிடைப்பதாக எழுதி உள்ளீர்கள். தற்சமயம் எத்தனை தொகுப்புகள் அந்த வகையில் உள்ளன. சிறந்தனவற்றை எங்களுக்குத் தருவீர்களா?

–டி.கே. சுகந்தி சீனிவாசன், பொள்ளாச்சி

பதில்: பயர்பாக்ஸ் பிரவுசருக்கான தொகுப்புகள் பல உருவாக்கப்பட்டு இணைய தளத்தில் இலவசமாகக் கிடைக்கின்றன. சென்ற மாதம் வரை இவற்றின் எண்ணிக்கை 5,000 ஐத் தாண்டி விட்டது. கம்ப்யூட்டர் மலரில் அவ்வப்போது பயனுள்ள ஆட் ஆன் தொகுப்புகள் குறித்த தகவல்கள் தரப்பட்டு வருகின்றன. இந்த இதழிலும் ஒரு புரோகிராம் குறித்து எழுதப்பட்டுள்ளது.

கேள்வி: என் வேர்ட் டாகுமெண்ட்டில் உள்ள ஹெடரில்

அன்றாடத் தேதி வரும்படி அமைக்க முடியுமா? எந்த தேதியில் டாகுமெண்ட் திறந்து பார்க்கிறோமோ, அந்த தேதி வர வேண்டும்.

–சி.ஆர். விஜயமாலா, சின்னமனூர்

பதில்: டாகுமெண்ட்டைத் திறந்து கொள்ளுங்கள். ஹெடர் கிடைக்க வியூ மெனுவில் ஹெடர் அண்ட் புட்டர் தேர்ந்தெடுக்கவும். இப்போது ஹெடர் உங்களுக்குக் காட்டப்படும். இனி அதில் கர்சரைக் கொண்டு சென்று வைக்கவும். பின் இன்ஸெர்ட் மெனு சென்று அதில் பீல்டு என்பதைத் தேர்ந்தெடுக்கவும். பின் கிடைக்கும் பட்டியலில் டேட் என்பதைத் தேர்ந்தெடுத்தால், உடனே எந்த பார்மட் என்பதனைத் தேர்ந்தெடுக்க ஒரு பட்டியல் தரப்படும். அதில் தேவையான பார்மட்டினைத் தேர்ந்தெடுத்து பின் ஓகே கிளிக் செய்து விண்டோக்களை மூடவும். இனி அந்த நாளின் தேதி நீங்கள் தேர்ந்தெடுத்த பார்மட்டில் கிடைக்கும்.

கேள்வி: வேர்ட் டாகுமெண்ட்டில் வெர்ஷன் என்ற வகையில் நம் பைலில் பல பதிப்புகளை ஏற்படுத்தலாம் என்று சொல்கிறார்கள். இதனை எப்படி ஏற்படுத்தலாம்?

–கே.எல். சுதாகர், சென்னை

பதில்: இதுவரை கம்ப்யூட்டர் மலரில் சொல்லாத ஒரு தகவலைக் கேட்டுள்ளீர்கள். நன்றி.

வேர்ட் டாகுமெண்ட்களைத் தயார் செய்கையில், டாகுமெண்ட் ஒன்றில் நாம் ஏற்படுத்தும் மாற்றங்களுக்கேற்ப அதன் வெவ்வேறு பதிப்புகளை (Versions) ஒரே பைலில் தயார் செய்து சேவ் செய்திடலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நாம் எப்போது என்ன முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தினோம் என்று அறிந்து அவற்றை ஏற்றுக் கொள்ளலாம். இதற்கு மாற்றங்களை ஏற்படுத்திய பின் File மெனு சென்று Version என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். இப்போது வெர்ஷன்ஸ் டயலாக் பாக்ஸ் காட்டப்படும். அதில் Save Now என்பதைக் கிளிக் செய்திடவும். உடன் Save Version என்ற பாக்ஸ் காட்டப்பட்டு, அதில் அந்த வெர்ஷனுக்கான உங்கள் குறிப்புகளை நீங்கள் அமைக்கலாம். இதில் எடுத்துக் காட்டாக, நீங்கள் எதற்காக இந்த வெர்ஷனை, அந்த நிலையில் சேவ் செய்கிறீர்கள் என எழுதி வைக்கலாம். பின் குளோஸ் கிளிக் செய்து முடினால், வேர்ட் அந்த வெர்ஷனை சேவ் செய்திடும். இது உங்கள் டாகுமெண்ட் அந்த நேரத்தில் எப்படி தோற்றமளிக்கிறது என்பதேயாகும். பின் மீண்டும் நீங்கள் ஏற்படுத்தும் மாற்றங்கள் இதில் ஏறாது. இதில் என்ன சிறப்பு என்றால் அனைத்து வெர்ஷன்களும் ஒரே பைலில் இருக்கும்.

கேள்வி: இன்டர்நெட் முழுவதையும் மொத்தமாக கிராஷ் செய்து அழித்திட முடியுமா?

–என். ரஞ்சன் தாஸ், சென்னை

பதில்: நல்ல கற்பனைதான்; அல்லது பயத்தில் விளைந்த எண்ணம்தான். இதற்குப் பதில் ஒரு பெரிய 'முடியாது' என்பதுதான். இன்டர்நெட் என்பது பல்வேறு நெட்வொர்க்குகள் கூட்டாக இணைக்கப்பட்டதாகும். இதனை பல்வேறு அமைப்புகள், வர்த்தக நிறுவனங்கள், அரசுகள் நிர்வகிக்கின்றன. கட்டுப் படுத்துகின்றன. மேலும் இது தேவைக்கு அதிகமான நிலைகளில் நகல் செய்யப்பட்டும் அமைக்கப் பட்டுள்ளது. அதாவது ஒரு நெட்வொர்க்கில் ஒரு பகுதி கிராஷ் ஆனாலும், பயனாளர்கள் அதில் உள்ளவற்றை நெட்வொர்க்கின் இன்னொரு பகுதியில் பெற முடியும். பெரிய அளவில் நில அதிர்ச்சி, மின்சக்தி அதிகமாகிச் சேதம் விளைவித்தல் போன்றவை ஏற்பட்டாலும், இன்டர்நெட் முழுமையும் அழியாது. எடுத்துக் காட்டாக 2007 ஆம் ஆண்டின் முற்பகுதியில், பெரிய அளவில் தொடர் நில அதிர்ச்சி ஏற்பட்ட போது கடலுக்கடியில், இன்டர்நெட் இணைப்பு தரப் பதிக்கப்பட்ட கேபிள்கள் சேதத்தைச் சந்தித்தன. இதனால் இன்டர்நெட் மற்றும் தொலைபேசி தொடர்பில் சிக்கல்கள் ஏற்பட்டு, பின் பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு சரி செய்யப்பட்டன. எனவே இன்டர்நெட் முழுமையும் அழிந்துவிடுமோ என்ற பயம் அறவே வேண்டாம்.

கேள்வி: 404 என்னும் எர்ரர் செய்தி இன்டர்நெட் பிரவுசிங் போது ஏன் ஏற்படுகிறது? அப்போது நான் என்ன செய்திட வேண்டும்?

–கா. உஷா தேவி, தாம்பரம்

பதில்:இன்டர்நெட் தேடலில் நீங்கள் கொடுத்த முகவரியில் உள்ள தளத்தினைத்

தேடிப் பெறாத நிலையில், உங்களின் சர்வர் உங்களுக்குத் தரும் செய்தி இது. “Page Not Found” என்று கூட வரலாம். பல வேளைகளில் இந்த செய்தியுடன் நீங்கள் என்ன செய்யலாம், அல்லது என்ன செய்திருக்கலாம் என்று குறிப்புகளும் தரப்படும். நீங்கள் முகவரியைச் சரியாக டைப் செய்தீர்களா? என்பது பொதுவான ஒரு தகவல். பொதுவாக அந்த முகவரியில் உள்ள தளம் சர்வரில் இருந்து நீக்கப்பட்டிருக்கலாம். எனவே தேடும் முயற்சியைக் கைவிட லாம். அல்லது வேறு ஒரு பிரவுசரின் மூலம் அதனைப் பெற முயற்சிக்கலாம். ஆனால் அது அவ்வளவு மாறுதலான முடிவைத் தரும் என்று எதிர்பார்க்க முடியாது.

இருப்பினும் கூகுள் இதில் கை கொடுக்கலாம். பொதுவாக கூகுள் தான் இன்டெக்ஸ் செய்திடும் இணைய தளங்களை தன் கேஷ் மெமரியில் வைத்திருக்கும். எனவே மேலே நீங்கள் தந்திருக்கும் பிழைச் செய்தி கிடைத்தால் கூகுள் சர்ச் பாக்ஸ் பெற்று, அதில் cache: எனக் கொடுத்து பின் நீங்கள் தந்துள்ள இணைய முகவரியைத் தரவும். உங்கள் இணைய முகவரியில், அந்த தளத்தின் அடிப்படை முகவரிக்குப் பின், அதன் பக்கங்களுக்கான முகவரி பெயர் இருப்பின், அதனை நீக்கி விட்டு தளத்தின் பெயரை மட்டும் அமைத்துத் தேடிப் பார்க்கவும். தளம் கிடைத்தால் பின் அதில் நீங்கள் தேடும் அந்த குறிப்பிட்ட பக்கத்தைத் தேடலாம்.



பதில்

கேள்வி: என் எக்ஸெல் ஒர்க் ஷீட்டில் சில வேளைகளில் எண்கள் பெருக்கி அமைக்கும்போது பல தசம ஸ்தானங்களில் விடை கிடைக்கிறது. சில வேளைகளில் அது ரவுண்ட் ஆப் செய்யப்பட்டு கிடைக்கிறது. இதில் உள்ள லாஜிக் புரியவில்லை. விளக்கவும்.

–ஆர். சிவாஜி. விருதுநகர்

பதில்: சில எடுத்துக் காட்டுக்களை நீங்கள் தந்து கேட்டிருக்கலாம். பரவாயில்லை; நானே தருகிறேன். B2 செல்லில் 33.33333333 என்ற மதிப்பைத் தரவும். B3யில் 33.333333333 எனத் தரவும். அதாவது முதலில் தந்ததைக் காட்டிலும் ஒரு இலக்கம் கூடுதலாக. அடுத்து செல் C2ல் =B2*3 என பார்முலா அமைக்கவும். செல் C3ல் =B3*3 என பார்முலா அமைக்கவும். இப்போது விடையாக C2ல் 99.99999999 எனக் கிடைக்கும். C3ல் 100 எனக் கிடைக்கும். இது ஏன் இப்படி என்பதுதான் உங்கள் கேள்வி. எக்ஸெல் முதலில் ஒரு ஒர்க் ஷீட்டை உருவாக் குகையில் ஜெனரல் பார்மட்டை பின்பற்றுகிறது. எண்கள் பத்து இலக்கங்களாக அமைக்கும் வகையில் உள்ளதே ஜெனரல் பார்மட். புள்ளிக்கு வலது அல்லது இடது பக்கம் என்றிராமல் மொத்தம் பத்து இலக்கங்கள் அமைக்கப்படும். இலக்கங்கள் 10க்கு மேல் கொண்ட தாக அமைக்கப்பட்டாலோ அல்லது கிடைக்கும் விடை 10 இலக்கங்களுக்கு மேல் இருந்தாலோ அது அடுத்த எண்ணுக்கு ரவுண்ட் ஆப் செய்யப்பட்டு காட்டப்படும். புள்ளிக்கு இடது பக்கம் அதிக இலக்கங்கள் இருந்தால், அதற்கேற்ற சயின்டிபிக் நொட்டேஷன் முறையில் எண் காட்டப்படும். இதனை நீங்கள் மாற்ற வேண்டும் என்றால் செல் பார்மட்டினை மாற்ற வேண்டும்.